DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC.No. 703/2022 Crime No. 120/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-14- S.மகேஸ்வரி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 09.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது பவானி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது கடந்த 24.03.2022 ம் தேதியன்று, நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.P.S.சரவணன் என்பவர் நிலைய குற்ற எண்.120/2022, ச/பி இதச 294(b), 353, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்புவித்த வழக்குக் கோப்பை பெற்று அன்றைய தினம் 16.45 மணிக்கு, சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான சரவணன் மற்றும் பிரபு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சம்பவயிட சாட்சிகளான சாந்தி, தலைமை எழுத்தர், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி, ஆனந்த பட், பெஞ்ச் கிளர்க், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி, ஆடலரசன், உதவியாளர், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி, கலைசெல்வி, பெஞ்ச் கிளர்க், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி, சரவணன், தலைமை எழுத்தர், நான்காவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், பவானி, பிரபு, இளநிலை கட்டளைப் பணியாளர், நான்காவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், பவானி ஆகியோர்களை விசாரித்து, தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் எதிரியை தேடியபோது அவர் நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே நின்றிருந்தார், அவரை புகார்தாரர் சாந்தி அடையாளம் காட்ட எதிரியை விசாரித்தபோது அவர் தனது பெயர் மற்றும் முகவரியை கூறினார். குற்றத்தை ஒப்புக் கொண்டவர், (குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை என எதிரி ஆட்சேபனை செய்தார்.) தான் கடலூர் பொதுப்பணித்துறையில் உதவி பொறியாளராக வேலை செய்து வருவதாக கூறினார். எதிரி அரசு பணியாளர் என்பதால் கடலூர் பொதுப்பணித்துறை அலுவலக கண்காணிப்பாளர் மற்றும் கோட்டப் பொறியாளர் ஆகியோர்களுக்கு தகவல் தெரிவித்தும், உச்ச நீதிமன்ற வழிக்காட்டுதலின்படி எதிரியை முறைப்படி கைது செய்தும், நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து, தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன்

பின்னர் 25.03.2022 ம் தேதியன்று, சாட்சிகள் ராமசாமி, வழக்கறிஞர், பவானி, S.R.விஜயகுமார், வழக்கறிஞர், பவானி, N. கோவிந்தசாமி, வழக்கறிஞர், பவானி, குமரேசன், சிறப்பு உதவி ஆய்வாளர், ஆகியோர்களை தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் திரு.செந்தில்குமார், System Officer, District Court, Erode அவர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, CCTV பதிவுகள் மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 65(B) ன் கீழான சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றேன். பின்னர் கடலூர் மாவட்ட நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பாளர் திருமதி.அமர்ஜோதி அவர்களையும் மற்றும் கோட்டப் பொறியாளர் திரு.சுந்தர் அவர்களையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 11.06.2022 ம் தேதியன்று, எதிரி மீது இதச 294(b), 353, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

உங்களது சொந்த ஊர் எதுவென்றால், சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி, அழகனூர் என்கின்ற கிராமம். உங்களுக்கு முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால், 24.03.2022 ம் தேதி, மாலை 04.30 மணிக்கு என்னிடம் கொடுத்தார்கள். முதல் தகவல் அறிக்கை மட்டும்தான் கொடுத்தார்களா என்றால், முதல் தகவல் அறிக்கை மட்டும்தான் கொடுத்தார்கள். நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரியாகிய என்னை நீதிமன்றத்திற்கு வெளியில் வைத்து அழைத்துச் செல்லவில்லை என்றாலும், நான் நீதிமன்றதின் உள்ளே இருந்தபோது புலன் விசாரணை அதிகாரியான நீங்களும், குமரேசன், உதவி ஆய்வாளரும் மற்றும் மற்றொரு பெண் காவல் ஆய்வாளரும் என்னை நீதிமன்றத்திற்கு வெளியே இழுத்துச் சென்று, நீதிமன்றத்திற்கு பின்னாடி நின்ற வாகனத்தில் ஏற்றி குமரேசன் என்பவர் வண்டியை ஓட்ட பவானி காவல் நிலையம் அழைத்துச் சென்றீர்கள் என்றால், சரியல்ல.

முதல் தகவல் அறிக்கைப் பெற்ற பின்னர் நீங்கள் என்ன என்ன ஆவணங்கள் பார்த்தீர்கள் என்றால், நான் எந்த ஆவணமும் பார்க்கவில்லை, முதல் தகவல் அறிக்கை பெற்று, சாட்சிகளை விசாரித்தேன். என்னை கைது செய்ததற்கு நீதிமன்றத்தில் ஏதேனும் பிடியாணை கட்டளை பெற்றீர்களா என்றால், பெறவில்லை. நீங்கள் இறுதியறிக்கையில் தாக்கல் செய்த சட்டப்பிரிவுகள் பிடியாணை வழக்கா அல்லது அழைப்பாணை வழக்கா என்று தெரிந்து கொண்டீர்களா என்றால், அது நீதிமன்றத்திற்குத்தான் தெரியும்.

நீங்கள் விசாரணை செய்தபோது பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் அலுவலகம் மற்றும் அதன் தொடர்புடைய வளாகங்களின் CCTV பெற்றீர்கள் என்றும் நீதிமன்றத்திலுள்ள மற்ற CCTV காட்சிகளை பெறவில்லை என்றாலும், அதை தற்போது பெற தயாராக உள்ளீர்களா என்றால், இவ்வழக்கிற்கு தேவையான CCTV ஆவணங்கள் மட்டுமே

பெற்றேன். மற்ற CCTV காட்சிகள் இவ்வழக்கிற்கு தேவையில்லை என்பதால், பெறவில்லை. நீங்கள் எதிரியாகிய என்னை நீதிமன்றத்திலிருந்து அழைத்துச் சென்றதை மறைக்கவும், அ.சா.1 சாந்தி புகார் சுயமாக கொடுக்கவில்லை என்பதை மறைக்கவும், இதர CCTV காட்சிகள் பெறப்படவில்லை என்றால், சரியல்ல.

14.11.2022 ம் தேதியில், நீதிமன்றத்திலிருந்து மாலை 04.00 மணிக்கு, எதிரிக்கு வழங்கிய நகல்கள் மொத்தம் 68 பக்கங்கள் நகல்களாக வழங்கப்பட்டது இதுதான் என்றால், சரிதான். எதிரியாகிய எனக்கு வழங்கிய நகல்களில் நீதிமன்ற முத்திரை இல்லாமல் வழங்கப்பட்டது என்றால், நீதிமன்ற உத்தரவுப்படி வழங்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டபடி OS.No.147/2013, திரு.குழந்தைவேல் என்பவர் எதிரியாகிய எனது அப்பா பாட்டப்பன் என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் கோப்புகளை பார்த்தீர்களா என்றால், இவ்வழக்கிற்கு அது தேவைப்படாததால் நான் அதைப் பார்க்கவில்லை.

அ.சா.1 சாந்தியை எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால், மாலை 17.00 மணிக்கு விசாரித்தேன். அ.சா.1 சாந்தியை எங்கு வைத்து வாக்குமூலம் பதிவு செய்தீர்கள் என்றால், சம்பவயிடத்தில் வைத்து பதிவு செய்தேன். இவ்வழக்கின் சாட்சியான ஆனந்த் பட் அவர்களை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால், 24.03.2022 ம் தேதியன்று, சம்பவத்தின் தொடர் விசாரணையாக விசாரித்தேன். சாட்சியான ஆடலரசன், கலைசெல்வி, சரவணன் மற்றும் பிரபு ஆகியோர்களை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால், 24.03.2022 ம் தேதியன்று, சம்பவத்தின் தொடர் விசாரணையாக விசாரித்தேன். மற்ற சாட்சிகளான ராமசாமி, விஜயகுமார், கோவிந்தசாமி மற்றும் குமரேசன் ஆகியோர்களை எங்கு வைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால், 25.03.2022 ம் தேதியன்று, நீதிமன்றத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு விசாரித்தேன்.

மற்ற சாட்சிகளான அமரஜோதி, சுந்தர், செந்தில்குமார் மற்றும் சரவணன் ஆகியோர்களை எங்கு வைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால், 30.03.2022 ம் தேதியன்று, அவர்களைஅவரவர் அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்தேன். செந்தில்குமார் அவர்களை எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால், நேரம் நினைவில்லை. மற்ற சாட்சிகளை இரவு சென்று காலையில் விசாரித்துவிட்டு வந்துவிட்டேன். இறுதியறிக்கையில் குறிப்பிடப்பட்ட சாட்சிகளின் பட்டியலில் பக்கம் 57 முதல் 59 வரை திரு.ஆனந்த பட், திரு.ராமசாமி, திரு.விஜயகுமார், திரு.குமரேசன், சரவணன் மற்றும் மகேஸ்வரி ஆகியோர்களின் கணவர் மற்றும் தந்தை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது, மற்றவர்களுக்கு குறிப்பிடப்படவில்லை என்றால், அரசு அலுவலங்களில் பணிபுரிவதால் அவர்களது பணியை குறிப்பிட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. குமரேசன் மற்றும் சரவணன் ஆகியோர்களும் அலுவலர்கள்தான் அவர்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

நீங்கள் CCTV பதிவுகளை எப்போது பார்த்தீர்கள் என்றால், 27.04.2022 ம் தேதியன்று பார்வையிட்டேன். அந்த CCTV பதிவுகளில் 02.45 முதல் 03.00 மணி வரை எதிரியாகிய நான் நீதிமன்றத்தில் இல்லாத சமயத்தில், எந்த சம்பவமும் நடைபெறாத நிலையில் என் மீது எவ்வாறு

குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், CCTV பதிவுகளில் பதிவு நேரம் மாறியிருக்கலாம் என்றும் சாட்சிகள் அனைத்தும் சுமார் 03.00 மணி எனக் கூறியதால் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். எதியாகிய நான் நீதிமன்றத்தில் மாலை 04.20 மணிக்கு மேல்தான் நீதிமன்றத்திற்குள் வருகிறேன் என்றாலும், நீங்கள் முறையாக புலன் விசாரணை செய்யாமல், சாட்சிகளை மட்டும் வைத்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது ஏற்புடையதல்ல என்றால், சரியல்ல.

எதிரியாகிய நான் மேதகு நீதிமன்றத்தில் 16.11.2022 ம் தேதியில், Discharge Petition U/s 239 CrPC ன் படி காவல்துறை அதிகாரி பவானி மற்றும் திருமதி.சாந்தி ஆகியோர்களை சேர்த்து மனு தாக்கல் செய்துள்ள விவரம் தங்களுக்கு தெரியுமா என்றால், எனக்குத் தெரியாது. புலன் விசாரணை அதிகாரியான தாங்கள் இவ்வழக்கில் என்ன நடக்கிறது என்பதை தெரிந்து கொள்வது கட்டாயம் என்றால், சரிதான். இவ்வழக்கில் இதுவரை என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ளவில்லை என்றாலும், Discharge Petition U/s 239 CrPC ல் திருமதி.சாந்தி எந்த ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில் நாங்கள் இவ்வழக்கை திரும்பப் பெற Withdrawl Petition தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால், அது நீதிபதிதான் முடிவு செய்ய வேண்டும்.

மேதகு நீதிமன்றத்தில் 13.12.2022 ம் தேதியில், 227 CrPC ன் படி மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் மற்றும் அதனுடன் 50 ஆவணங்கள், அதில் 10 வதாக குறிப்பிட்ட ஆவணம் என் தந்தை 17.02.2021 ம் தேதியில் OS.No.147/2013 வழக்கில் திரு.குழந்தைவேல் என்பவர் உண்மையை மறைத்து பொய்யை சொல்லி போலி ஆவணமாக 02.06.1999 தேதியிட்டு மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பொய்யான உத்தரவை பெற்றது குறித்து தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்ட நீதியை ரத்து செய்யக் கோரி மனு மற்றும் ஆவணங்களின் பட்டியல் தாக்கல் செய்துள்ளேன், அது குறித்து தங்களுக்கு தெரியுமா என்றால், நான் பவானி காவல் நிலையத்திலிருந்து பணிமாறுதலில் சென்றுவிட்டதால் மேற்படி விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது.

நீங்கள் எப்போது பணிமாறுமதல் பெற்றீர்கள் என்றால், தேதி மற்றும் மாதம் நினைவில்லை, 2024 ம் வருடம் பெற்றேன். தற்போது பவானி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். மேதகு நீதிமன்றமும், 09.01.2024 ம் தேதியன்று விடுதலை குவிமுச. பிரிவு 249 A மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் மற்றும் 20 ஆவணங்கள் சமர்ப்பித்துள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

21.06.2024 ம் தேதியன்று, 116 பக்கங்கள், பிரமாண வாக்குமூலம், மனு மற்றும் ஆவணங்கள் CMP.No.5476/2022, dt.27.03.2023 உத்தரவின் திருத்தங்கள் குறித்து மனு தாக்கல் செய்துள்ளேன். அதைப் பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. 27.09.2024 ம் தேதியில் சென்னை உயர் நீதிமன்றத்தில் இவ்வழக்குக் குறித்து மனு தாக்கல் செய்தது குறித்து குறிப்பாணை தாக்கல் செய்துள்ள விவரங்கள் தங்களுக்கு தெரியுமா என்றால், தெரியாது.

29.08.2024 ம் தேதியில், நான் விடுதலை குவிமுச. பிரிவு 248(1) மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. 13.11.2024 ம் தேதியில், 260 பக்கங்கள் கொண்ட பிரமாண வாக்குமூலம் மற்றும் மனு கொண்ட Written Argument சமர்ப்பித்து CMP.No.5476/2022, dt.27.03.2022 உத்தரவின் திருத்தங்கள் கோரி சமர்ப்பித்துள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் தெரிவித்து அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களுக்கும் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு தபால் அனுப்பிய விவரங்கள் தங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

புகார்தாரர் தயார் செய்த புகார் கணினியை பார்வையிட்டீர்களா என்றால், பார்வையிடவில்லை. எதிரியாகிய எனக்கும், புகார்தாரருக்கும் ஏதேனும் முன்விரோதமோ, உள்நோக்கமோ இருக்கிறதா என்பதை நீங்கள் உங்கள் புலன் விசாரணையில் தெரிந்து கொண்டீர்களா என்றால், தெரிந்துகொள்ளவில்லை. பவானி காவல் நிலையத்தில் எதிரியாகிய நான் 23.012.2021 ம் தேதியில் புகார் மனு மற்றும் 21 ஆவணங்கள் கொண்ட புகார் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் தெரியுமா என்றால், தெரியாது.

மேற்படி புகார் குறித்து பவானி காவல் நிலையத்திலிருந்து திரு.ரகுநாதன், மற்றும் திருமதி.உமா மற்றும் ஒரு காவல் அலுவலர் ஆகியோர் 06.03.2022 ம் தேதியில் என்னை சங்கமேஸ்வரர் கோவிலில் வைத்து விசாரணை செய்து, அதன் தொடர்ச்சியாக சட்டக் கருத்துரை பெற 07.03.2022 ம் தேதியில் 105 பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் மூலமாக காவல்துறை அதிகாரி, பவானி அவர்களுக்கு, உயரதிகாரிகள் மூலம் சார்பு செய்யப்பட்டது. மற்றும் 21.03.2022 ம் தேதியில் 20 பக்கங்கள் கொண்ட மனு மற்றும் விவரங்கள் மாவட்ட கண்காணிப்பாளர், ஈரோடு அவர்கள் மூலமாக சமர்ப்பித்துள்ளேன். மேலும் மாவட்ட குற்றவியல் நீதித்துறையில் நான் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் பிரமாண வாக்குமூலம் நேரில் 6 பக்கங்களும் மற்றும் Speed Post மூலம் 4 பக்கங்களும், 23.03.2022 ம் தேதியில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் குறித்து தெரியுமா என்றால், தெரியாது.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எதிரியாகிய எனது அலுவலகத்திற்கு எப்படி தகவல் தெரிவித்தீர்கள் என்றால், சரிதான். மேற்படி தகவலை எப்படி அனுப்பினீர்கள் என்றால், தொலைபேசியிலும், மின்னஞ்சல் மூலமும் மற்றும் காவலர் மூலம் நேரில் கொடுத்தேன். அதை நேரில் எடுத்துச் சென்ற காவலரின் பெயர் தெரியுமா என்றால், திரு.மினிசாமி ஆகும். மேற்படி தபாலை அமரஜோதி 26.03.2022 ம் தேதியன்று பெற்றுக் கொண்டார்கள் என்றால், சரிதான். எதிரியாகிய என்னை கோவை மத்திய சிறைச்சாலைக்கு எப்படி அழைத்துச் சென்றீர்கள் என்றால், பெண் காவலர் மூலம் வாகனத்தில் அழைத்துச் சென்றோம். திரு.சரவணன் வாகனம் ஓட்ட அதில் அழைத்துச் சென்றீர்கள் என்றால், அது எனக்கு நியாபகம் இல்லை. பெண் காவலர்கள் கனிமொழி மற்றும் யுவராணி மத்திய சிறைச்சாலைக்கு வந்தனர்.

நீங்கள் பவானி காவல் நிலையத்தில் 24.03.2022 ம் தேதியில், நீதிமன்றத்தில் எதிரி 04.20 மணிக்கு மேல்தான் நீதிமன்றத்திற்குள் நுழைந்தார் என்றும் பவானி குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து திரு.ஈஸ்வரன் அவர்கள் அளித்த புகார் மனுவின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வரவழைத்தார்கள் என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. 24.03.2022 ம் தேதியில் திரு.ஈஸ்வரன், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஊழியர், அ.சா.1 சாந்தியை 02.47, 57 செகண்ட் மணிக்கு, அழைத்துச் சென்றுள்ளார் என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. 24.03.2022 ம் தேதியன்று 03.00 மணி முதல் 05.00 மணிக்குள் பவானி உரிமையியல் நீதிமன்றம், தலைமை எழுத்தர் அலுவலகத்தில் நடந்த பதிவுகளும், வளாகத்தில் நடந்த பதிவுகளும் திறந்த நீதிமன்றத்தில் ஒளிப்பரப்பப்பட்டது.

எதிரியாகிய நான், 04.12 மணிக்குத்தான் பவானி உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தர் அறைக்குள் வந்தேன் என்றால், சரிதான். மேற்படி CCTV பதிவின்படி நான் தலைமை எழுத்தர் அருகில் செல்லவில்லை என்றாலும், ஆடலரசினிடம்தான் கோப்புகளை பெற்றுச் சென்றேன் என்றால், சரியல்ல. நீங்கள் தலைமை எழுத்தரிடம் கை நீட்டி பேசியதும், ஆடலரசு போலீஸ் விசாரணையின்போது சம்பவத்தை கூறியுள்ளார். 04.12 முதல் 04.16 மணி வரை நீதிமன்ற தலைமை எழுத்தரின் அலுவலகத்தில் இருந்தேன் என்றால், சரியல்ல. நான் தலைமை எழூத்தர் அருகில் செல்லவில்லை என்றால், சரிதான். CCTV பதிவுகளில் சத்தம் வரவில்லை என்றால், சரிதான்.

மேதகு நீதிமன்றத்தில் அ.சா.1 ன் பணிகளை நான் எதுவும் தொந்தரவு செய்யவில்லை என்றால், சரியல்ல. நீங்கள் விசாரணை அதிகாரி என்ற முறையில் என்னிடம் எதுவும் விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல. நீங்கள் என்னை நீதிபதியின் முன்பு எத்தனை மணிக்கு ஆஜர்படுத்தினீர்கள் என்றால், 09.45 மணிக்கு ஆஜர்படுத்தினேன். எதிரியாகிய நான் பவானி குற்றவியல் நீதிமன்றத்தில் புகார்தாரர் CMP.No.9869/2013 தாக்கல் செய்தது தங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. எதிரியாகிய நான் பவானி குற்றவியல் நீதிமன்றத்தில் புகார்தாரர் CMP.No.10510/2013 தாக்கல் செய்தது தங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

25.03.2022 ம் தேதியில், பிணை மனுவிற்கு ஆட்சேபனை தெரிவித்தீர்களா என்றால், தெரிவித்தேன். இவ்வழக்குக் குறித்து பல பத்திரிக்கைகளில் செய்தி வந்தது குறித்து உங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. எதிரியாகிய நான் சென்னை உயர் நீதிமன்றத்தில் அ.சா.1 ன் மீது புகார் கொடுத்து ROC.66260/C/2023/C1 ன்அதன் அடிப்படையில் ஈரோடு மாவட்ட நீதிபதி விசாரணை குழு அமைத்தார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. எதிரியாகிய என் மீது பொய்யான வழக்கு போடப்பட்டது தொடர்பாக உங்களது உயரதிகாரிகள் உங்களை விசாரித்தார்களா என்றால், விசாரிக்கவில்லை.

நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சாட்சிகளின் வாக்குமூலத்தை நீங்கள் பார்த்துள்ளீர்களா என்றால், நான் பார்க்கவில்லை. எதிரியாகிய நான் அரசு அலுவலர் என்பதால் என் மீது குற்ற வழக்குக் தொடர அரசின் முன் அனுமதி பெறப்பட்டதா என்றால், அவர் அரசு அலுவலர் என்பதால் அவர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. முன் அனுமதி எதுவும் தேவையில்லை. 24.03.2022 ம் தேதியில், 04.00 மணிக்கு, எதிரியாகிய நான், திருமதி.பிரதீபா, தலைமை எழுத்தர், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் திரு.குழந்தைவேல், OS.No.147/2013 என்ற வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு புகார் கொடுத்து அதன் அடிப்படையில் ஈரோடு மாவட்ட தலைமை நீதிபதி அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு ஆஜராக இருந்தது தங்களுக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC.No. 703/2022 Crime No. 120/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-13- சரவணன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 09.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது நீலகிரி மாவட்டம், மதுவிலக்குப் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது கடந்த 24.03.2022 ம் தேதியன்று, மாலை சுமார் 03.00 மணியளவில் நான் நிலைய அலுவலில் இருந்தபோது பவானி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தர் திருமதி. சாந்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று காவல் நிலைய குற்ற எண். 120/2022, ச/பி இதச 294(b). 353, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் மாண்பமை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை உயரதிகாரிகளின் பார்வைக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திருமதி. மகேஸ்வரி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். நான் தற்பொழுது நீலகிரி மாவட்டம், மதுவிலக்குப் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது கடந் புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் பிறந்த ஊர் எதுவென்றால், குமாரபாளையம் ஆகும். கடந்த 24.03.2022 ம் தேதியில் பவானி காவல் நிலையத்தில் எந்தப் பதவியில் இருந்தேன் என்றால், சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தேன். அ.சா.1 சாந்தி அவர்கள் 03.00 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரானர்கள் என்ற விவரம் உண்மையா என்றால், உண்மைதான். பவானி காவல் நிலையத்தில் CCTV உள்ளதா என்றால், உள்ளது. அன்றைய தினம் CCTV வேலை செய்யவில்லை. 03.00 மணிக்கு புகார் பெற்றுக் கொண்டு நீங்கள் என்ன செய்தீர்கள் என்றால், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

பொதுவாக முதல் தகவல் அறிக்கை தலைமை எழுத்தர்தான் பதிவு செய்வார் என்றும் நீங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு குறிப்பிட்டுக் காரணம் எதுவும் உள்ளதா என்றால், பொதுவாக தலைமை எழுத்தர்கள் பதிவு செய்யமாட்டார்கள், அன்றைய பொது

நாட்குறிப்புப் படி நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையில் வரிசை 3 ல் குறிப்பிட்டப்படி சம்பவம் நிகழ்ந்த நேரம் 24.03.2022 தேதி 15.00 மணி முதல் 16.00 மணி வரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், தோரயமாக 15.00 மணி முதல் 16.00 மணி எனக் குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான்.

முதல் தகவல் அறிக்கை வரிசை 4 ல் புகாரானது எழுத்துமூலமாகப் பெற்றப்பட்டுள்ளதா என்றால், சரிதான். எழுத்து மூலம் என்பது கையால் எழுதப்பட்ட ஆவணங்கள் மட்டுமே என்றால், கையாலும் எழுதிக் கொடுக்கலாம், கணினியில் தயார் செய்யப்பட்டதும் உள்ளடங்கும். அ.சா.1 சாந்தி, நீதிமன்றத்திலிருந்து, காவல் நிலையத்திற்கு வர எவ்வளவு நேரம் ஆகும் என்றால், சுமார் 15 நிமிடத்தில் வந்து விடலாம். அ.சா.1 சாந்தி காவல் நிலையத்திற்கு எப்படி வந்தார் என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

புகார் கொடுத்ததும் எவ்வித விசாரணையும் செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டீர்களா என்றால், விசாரணை செய்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். யார் யாரை விசாரித்தீர்கள் என்றால், நான் அ.சா.1 சாந்தியை மட்டும் விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அ.சா.1 சாந்தியை என்ன என்ன மாதிரி விசாரித்தீர்கள் என்றால், அவர் கொடுத்தப் புகாரைப் படித்துப் பார்த்துவிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அ.சா.1 சாந்தி புகார் மனு மட்டும்தான் கொடுத்தாரா அல்லது புகாருடன் வேறு ஆவணங்கள் ஏதேனும் கொடுத்தாரா என்றால், புகார் மனு மட்டும்தான் கொடுத்தார்.

புகார் என் மீதுதான் கொடுத்தார், ஆனால் என்னை விசாரிக்கவில்லை என்றால், அதனை புலன் விசாரணை அதிகாரியிடம்தான் கேட்க வேண்டும். முதல் தகவல் அறிக்கை 04.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். நீங்கள் முதல் தகவல் அறிக்கை தவறாக என் மீது பதிவு செய்ததற்காக உங்கள் மீதும் மற்றும் உங்கள் உயரதிகாரி மீதும் புகார் கொடுத்து, அதன் அடிப்படையில் உங்களை விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள். யார் விசாரித்தார்கள் என்றால், பவானி காவல் ஆய்வாளர் விசாரித்தார். எங்கு வைத்து எந்த தேதியில் விசாரித்தார் என்றால், பவானி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார், ஆனால் தேதி ஞாபகம் இல்லை. எதற்காக உங்களை விசாரித்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வந்த தகவலின் அடிப்படையில் என்னை விசாரித்தார்கள்.

அந்த விசாரணையில் ஏதேனும் எழுத்து வடிவில் எழுதிக் கொடுத்தீர்களா என்றால், கொடுக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையின் படி அ.சா.1 சாந்தி 03.00 மணிக்கு காவல் நிலையம் ஆஜராகியிருந்தார் எ ன்றும் 04.00 மணிக்கு புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சம்பவமானது 03.00 மணிக்குள் நீதிமன்றத்திற்குள் நிகழ்ந்திருக்கும் என்றாலும், நீங்கள் முதல் தகவல் அறிக்கையின் சம்பவங்கள் அனைத்தும் 04.00 மணிக்குள் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. 04.00 மணிக்கு மேல் நிகழ்ந்த சம்பவங்களும் முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால், சரியல்ல.

முதல் தகவல் அறிக்கையில் 04.00 மணிக்கு மேல் நடந்த சம்பவங்கள் அனைத்தும் இருப்பதால் இது உள் நோக்கத்திற்காக 04.00 மணி என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், புகார் கொடுத்தபடி நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.